திரு. எம். சுரேந்திரன்: சார், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கேற்ப கருச்சிதைவு செய்து கொள்வதைச் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனை இருந்ததே, இது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நாடாளுமன்றத்தில் கருச்சிதைவுப்பற்றி ஒரு சட்டம் நிறைவேறியிருக்கிறது. சில விதிமுறையொட்டி கருச்சிதைவு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Poultry Units in rural areas

* 53 Q.—THIRU B. VEKATASWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to afford financial aid for the expansion of poultry units in large scale in rural areas; and

(b) if so, when the schemes will be implemented?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியுடன் இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் கோழி மும்முர வளர்ப்பு வட்டாரப் பகுதியில் கோழி வளர்ப்புக்கான திட்டம் ஒன்றை கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார்.

(இ) இத்திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடிய விரைவில் செயல்படுத்தப்படுவதற்காக இத்திட்டம் அனுமதிக்கப்படும்.

மதுரையில் நைலான் வலை தொழிற்சாலை.

* 54 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரையில் நைலான் வலை தொழிற்சாலை அமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

கிராம அதிகாரிகள்.

* 55 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழகத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளாகப் பணியாற்றும் மணியக்காரர், கணக்கப்பிள்ளை இவர்களை முழு நேர ஊழியராக்க திட்டம் ஏதேனும் தற்சமயம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இம்மாதிரி வேலை பார்ப்பவர்கள் தனியார் கம்பெனிகளில் வேலை பார்க்கலாமா? இவர்கள் பகுதி நேர ஆட்களாக வேலை பார்க்கலாமா?